TO BE PUBLISHED IN THE ... GAZETTE

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2019
# First Efficiency Bar Examination for the Officers of Sri Lanka Education Administrative Service - 2019

## (I) பொது நிர்வாகம்
## General Administration

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

- I ஆம் II ஆம் பகுதிகளிலிருந்து ஆகக் குறைந்தது இரு வினாக்களைத் தெரிவுசெய்து, ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

### பகுதி I

**1.** 1978 இன் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தங்களுக்கு அமைவாகவும் அதன் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் பின்வரும் ஒவ்வொரு தலைப்பின் கீழும், அரசியலமைப்பு ஏற்பாடுகளை வெவ்வேறாகக் காட்டுக.

(i) (அ) அமைச்சரவையில் அமைச்சர்களின் முழு எண்ணிக்கையினரையும் அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கையினையும் குறிப்பிடுக.

(ஆ) தேசிய அரசாங்கமொன்று அமைக்கப்படும் போது, அவ் ஒவ்வொரு அமைச்சர்களின் எண்ணிக்கைகள் குறித்து முடிவு செய்யப்படும் முறையினைச் சுருக்கமாக விளக்குக.

(ii) உறுப்புரை 33 (2) இன் பிரகாரம், அரசியலமைப்பில் அல்லது வேறு எழுத்திலான சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அல்லது உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மற்றும் செயற்பாடுகளுக்கு மேலதிகமாகக் குறிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அல்லது செயற்பாடுகள் **ஐந்தினைக்** குறிப்பிடுக.

(iii) உறுப்புரை 36 இன் பிரகாரம், சனாதிபதியின் சம்பளம், கொடுப்பனவு மற்றும் ஓய்வூதிய உரித்து ஆகியவற்றை பெற்றுக் கொள்ளும் முறையினைச் சுருக்கமாக விவரிக்குக.

(iv) உறுப்புரை 41இ. (1) இன் பிரகாரம், சனாதிபதியினால் அரசியலமைப்புப் பேரவைக்கு செய்யப்படும் சிபார்சுகளின் அடிப்படையில், அப்பேரவையால் அங்கீகரிக்கப்பட்டு, நியமனம் செய்யப்படும், அரசியலமைப்பின் அட்டவணையின் பிரகாரம் குறிப்பிடப்படும் பதவிகள் **ஐந்தினைக்** குறிப்பிடுக.

*(20 புள்ளிகள்)*

**2.** 1978 இன் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தங்கள் வரையான சகல திருத்தங்களைக் கவனத்திற் கொண்டு, பின்வரும் ஒவ்வொரு விடயம் தொடர்பிலும் சுருக்கமாக விளக்குக.

(i) அரசகரும மொழி

(ii) பாராளுமன்றத்தில், மாகாண சபைகளில் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளில் தேசிய மொழிகளின் பயன்பாடு

(iii) கற்கும் மொழி மூல அறிவித்தல் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் நான்கு

(iv) அமைச்சரவையின் பொறுப்பு, அமைச்சர்களது விடயங்கள் மற்றும் கடமைகள் தீர்மானிக்கப்படும் முறை

(v) அமைச்சரவைச் செயலாளர், பிரதம அமைச்சரது செயலாளர் மற்றும் அமைச்சர்களின் செயலாளர்கள் நியமிக்கப்படல் மற்றும் அவர்களது கடமைகளும் பதவி முடிவுறுத்தப்படுதலும்

*(20 புள்ளிகள்)*

**3.** 1996 இன் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், பின்வரும் ஒவ்வொரு விடயம் தொடர்பாக சுருக்கமாக விபரிக்குக.

(i) ஆணைக்குழு அங்கத்தவர்களின் எண்ணிக்கை, அங்கத்தவரொருவருக்கு இருக்க வேண்டிய அவசிய தகைமைகள், பதவிக்காலம், அப்பதவிக்கு நியமிக்கப்படும் முறை

(ii) ஆணைக்குழு அங்கத்தவர் ஒருவர் அப்பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் **ஐந்து**

(iii) ஆணைக்குழுவின் கடமைகள் **ஐந்து**

(iv) ஆணைக்குழுவின் அதிகாரங்கள் **ஐந்து**

*(20 புள்ளிகள்)*

[பக் 2 ஐப் பார்க்க.

Department of Examinations Sri Lanka

TO BE PUBLISHED IN THE WEBSITE OF DOE



සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது
வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2019
First Efficiency Bar Examination for the Officers of Sri Lanka Education Administrative Service - 2019

(II) நிதிப் பிரமாணம்
Financial Regulations

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

- **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

---

**1.** (i) 'செலவினம்' தொடர்பாக அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளில் உள்ள பின்வரும் ஒவ்வொரு தொழிற்பாடுகளையும் சுருக்கமாக விபரிக்குக. *(12 புள்ளிகள்)*

(அ) அனுமதியளித்தல்

(ஆ) அங்கீகாரமளித்தல்

(இ) அத்தாட்சிப்படுத்தல்

(ஈ) கொடுப்பனவு செய்தல்

(ii) அரச திணைக்களம் / பாடசாலை ஒன்றின் கொடுப்பனவு செய்யப்பட்ட உறுதிச்சீட்டுக்களை கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிப்பது தொடர்பாக நிதி ஒழுங்குவிதிகளில் காணப்படும் ஏற்பாடுகள் யாவை? *(04 புள்ளிகள்)*

(iii) அரசாங்க நிதி ஒழுங்குவிதிகளின்படி அரசாங்க திணைக்களம் / பாடசாலை ஒன்றில் வாகனம் தொடர்பாக பராமரிக்கப்படவேண்டிய இரண்டு பதிவேடுகளினைப் பெயரிட்டு அவற்றைச் சுருக்கமாக எழுதுக. *(04 புள்ளிகள்)*

**2.** (i) களஞ்சிய ஆண்டுச் சுற்றாய்வினை நடாத்துவது தொடர்பாக அரசாங்க நிதி ஒழுங்குவிதிகளில் காணப்படும் ஏற்பாடுகள் எவை? *(04 புள்ளிகள்)*

(ii) களஞ்சிய ஆண்டுச் சுற்றாய்வின் போது பயன்படுத்தப்படும் இரு ஆவணங்களினைப் பெயரிட்டு விவரிக்குக. *(10 புள்ளிகள்)*

(iii) பாடசாலை ஒன்றில் உபயோகிக்கத் தகாத இருப்புப் பொருட்கள் தொடர்பாக பாடசாலை தலைவரினால் எடுக்க வேண்டிய படிமுறைகள் எவை? *(06 புள்ளிகள்)*

**3.** (i) பாடசாலை நிதி முகாமைத்துவ செய்முறையில் அதிபரின் வகிபாகத்தினை சுருக்கமாக விளக்குக. *(08 புள்ளிகள்)*

(ii) கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றுநிருப அறிவுறுத்தல்களின்படி பாடசாலை அபிவிருத்தி சங்கத்தில் பொருளாளர் பதவி தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகளை சுருக்கமாக குறிப்பிடுக. *(08 புள்ளிகள்)*

(iii) பாடசாலைகளின் கணக்கீட்டு நடவடிக்கைகளை கணக்காய்வு செய்தல் (Auditing) தொடர்பாக இரு விடயங்களை எழுதுக. *(04 புள்ளிகள்)*

**4.** (i) கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டிகளின் படி, பாடசாலை ஒன்றின் நிதி நடவடிக்கைகள் தொடர்பாக பராமரிக்கப்படவேண்டிய பதிவேடுகளைப் பெயரிடுக. *(05 புள்ளிகள்)*

(ii) மேலே (i) இல் நிதி நடவடிக்கைகளுக்காக உபயோகிக்கப்படும் **ஐந்து** பதிவேடுகளைச் சுருக்கமாக விவரிக்குக. *(10 புள்ளிகள்)*

(iii) பாடசாலை ஒன்றில் தயாரிக்கப்படவேண்டிய நான்கு மாத கணக்கீட்டு அறிக்கையில் எவ்விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன? *(05 புள்ளிகள்)*

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

TO BE PUBLISHED IN THE WEBSITE OF DO



සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2019**

First Efficiency Bar Examination for the Officers of Sri Lanka Education Administrative Service - 2019

**(III) கல்விச் சட்ட, நிர்வாகம் மற்றும் மதிப்பீடு**

Education Law, Administration and Evaluation

## பகுதி II

**11.** (i) உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரிய கலாசாலைகள் அரசினால் பொறுப்பேற்றல் தொடர்பாக உள்ள சட்டங்களைப் பெயரிடுக.

(ii) அவற்றில் **ஒன்றைத்** தெரிவு செய்து அதன் குறிக்கோளை விளக்குக.

*(10 புள்ளிகள்)*

**12.** உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரிய கலாசாலைகள் என்பவற்றை அரசு பொறுப்பேற்றல் தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டங்களில் கீழ் காணப்படும் ஒழுங்கு விதிகளுக்கமைய கட்டணம் வசூலிக்காத தனியார் பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான அரச உதவிப் பணத்தின் மூலம் ஊதியம் வழங்கப்படுவதற்காக நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகள் யாவை? *(10 புள்ளிகள்)*

**13.** தேசிய கல்வி ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்திலிருந்து இன்று வரை அதன் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் எந்தளவுக்கு வெற்றி பெற்றுள்ளது என்பதை விரிவாக ஆராய்க. *(10 புள்ளிகள்)*

**14.** மாகாண கல்வி அதிகாரிகள் மற்றும் அதற்கு நிரல் அமைச்சுடன் வினைத்திறனான இடைத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக தற்போது நடைமுறையில் உள்ள ஏற்பாடுகள் யாவை? அவற்றை வலுவூட்ட மேற்கொள்ள வேண்டிய படிமுறைகளை விளக்குக. *(10 புள்ளிகள்)*

## பகுதி III

**15.** தேசிய கல்வியியல் கல்லூரிகளை மேலும் வலுவூட்டுவதற்காக (Empower) எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை விவரிக்குக. *(10 புள்ளிகள்)*

**16.** தற்போது ஆசிரிய மத்திய நிலையங்களினூடாக நடாத்தப்படும் ஆசிரிய கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை விவரித்து அவற்றை மேலும் வினைத்திறனாக மேற்கொள்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை விளக்குக. *(10 புள்ளிகள்)*

**17.** 'பதின்மூன்று வருட உத்தரவாதப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித் திட்டம்' கல்விப் பொதுத் தராதர (சா/த) பரீட்சையில் செலுத்தக்கூடிய தாக்கங்களை விவரித்து இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்குப் பொருத்தமாக இப்பரீட்சையின் வடிவமைப்பை மாற்றியமைப்பது எவ்வாறு என்பதை குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*

**18.** பாடசாலை அபிவிருத்தி திட்டமொன்றை வகுக்கும் போது எடுக்க வேண்டிய படிமுறைகளை முறையே காட்டி அவற்றில் முதலாம் படிமுறையில் பின்பற்ற வேண்டிய செயன்முறைகளை விவரிக்குக. *(10 புள்ளிகள்)*

## பகுதி IV

**19.** 'கிளினிக் மேற்பார்வை' என்பதை விளக்கி இதன் வலிவு நலிவுகளைக் குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*

**20.** பாடசாலைகளில் வெளியக மேற்பார்வைக்காக கல்வி அமைச்சு மற்றும் மாகாண கல்வி அதிகாரிகளால் நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகளை விவரிக்குக. *(10 புள்ளிகள்)*

**21.** கல்வி அமைச்சின் மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்திற்கேற்ப மதிப்பீட்டுக்குட்படுத்தப்படும் எட்டுப் பிரிவுகளைப் பெயரிட்டு அதில் ஒரு பிரிவின் கீழ் உள்ள தரங்களைக் குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*

**22.** பாடசாலை மட்ட கணிப்பீட்டு செயன்முறைகளை வலுப்படுத்துவதற்காக மேற்கொள்ளக்கூடிய **இரண்டு** நடவடிக்கைகளை விரிவாக விளக்குக. *(10 புள்ளிகள்)*

* * *

Department of Examinations Sri Lanka